**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. NO. 36/2016**
**PW11**

| | | |
|---|---|---|
| Name | : | மரு. ராஜகுரு |
| Father's/Husband's Name | : | சித்திரபுத்திரன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.12.2024.
A1 to 5 and 7 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரசு திருவண்ணாமலை மருத்துவக்கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபிரிந்து வருகிறேன். கடந்த 05.01.2015 அன்று அவசர சிகிச்சை பிரிவில் இரவுப்பணியில் இருந்தபோது தண்டராம்பட்டு தாலுக்கா, அகராம் கிராமத்தை சேர்ந்த ஏழுமலை என்பவரின் மகனாகிய பரசுராமன் என்பவரை அவரின் மனைவி கல்பனா என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார் . மேற்படி பரசுராமன் மயக்க நிலையில் இருந்தார். அவர் மனைவி பரசுராமனை தெரிந்த 7 நபர்கள் அதே தினம் இரவு 10.00 மணியளவில் அகரம் கிராமத்தில் அருவாள் ம்ற்றும் மரக்கட்டையால் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் மயங்கிய நிலையில் இருந்தார். வலி உணர்ச்சி காணப்பட்டது. ,இதயம் மற்றும் சுவாச உறுப்பு சீராக இருந்தது. அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. தலையின் பின்பகுதியில் 5x2x1 செ.மீ அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து சி .டி ஸ்கேன் செய்தவதற்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். நான் அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.6. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிர் தரப்பு குறுக்கு விசாரணை</u>** -

விபத்து பதிவேட்டில் காயமுற்றவரை அழைத்து வந்த நபரின் கணவர் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவர் மயக்க நிலையில் இருந்தார் என்று விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை என்று விசாரித்தார் என்று ஞாபனம் இல்லை. ஆய்வாளர் விசாரித்தபோது காயமுற்றவரை யார் அழைத்து வந்தார் என்றும் அவர் மங்கிய நிலையில் இருந்தார் என்றும் நான் கூறியுள்ளேன். அப்போது ஆய்வாளர் என்னிடம் அருவாள், மரக்கட்டை போன்ற ஆயுதத்தை காண்பிக்கவில்லை. ஒரு நபர் கூர்மையான பலகைக்கல் மீது விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/- B.C. Gopinath
Additional District Judge,
Tiruvannamalai.